# <u>திருப்பத்தூர் நகராட்சி</u>

2019 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 - ம் நாள் திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் திருப்பத்தூர் நகராட்சி.
நாள். 23.12.2019

**பொருட்கள்**

**130)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**5069/2019**/ஆ**2**, நாள்.**06.12.2019**–ல் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் **06.12.2019** அன்று நடைபெற்ற கூட்டம் மற்றும் அரசாணையில் வழஙகப்பட்ட அறிவுரைகளின்படி வேலூர் அரசு பொருட்காட்சியில் பஙகேற்கும் அரசு துறைகளுக்கு மட்டும் அரஙகுகள் அமைக்க இடம் வாடகையின்றி இலவசமாக வழஙகப்படும் என்றும் பொருட்காட்சியில் பஙகேற்கும் அரசு சார்வு நிறுவனஙகள் அனைத்தும் செய்தி மக்கள் தொடர்புத் துறை நிர்ணயிக்கும் வாடகை, மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தை செலுத்த வேண்டும். ஒவ்வொரு துறையும் அத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து ரூ.**8000/–** (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) மின்சார உபயோகத்திற்கு முன்பணமாக பொருட்காட்சி தொடஙகுவதற்கு முன்பாகவே இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு செலுத்த வேண்டும். மேற்படி அறிவுரைகளை பின்பற்றி பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையர், அவர்கள் அனைத்து செலவுகளையும் பணிகளையும் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கு ஏனைய **10** நகராட்சி ஆணையர்கள் இணைந்து அரசு பொருட்காட்சியினை சிறப்பாக நடத்திடவும் **1/11** பஙகு தொகை ரூ.**8000/–** செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2371 /2019/சி1)

**131)** இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35802/2013/பி3, நாள்.17.12.2019-ல் இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திருமதி.சரோஜா/சின்னிகான் என்பவரின் இறப்பு கால பணிக்கொடையை வழங்குவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரு பெற்று அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு சட்ட கருத்துரு வழங்க கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் சட்ட கருத்துரு வழங்க கட்டண தொகை ரூ.5000/- வழங்க கோரியுள்ளார். எனவே, சட்ட கருத்துரு பெறுவதற்கு மேற்படி கட்டணத்தை சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

சட்ட கருத்துரு வழங்க கட்டண தொகை ரூ.5000/- அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3977**/2011/**எச்1)

**132)** இந்நகராட்சிக்கு SBM-SWM 10th SHPC **2019–2020** திட்டத்தின் மூலம் கீழ்காணும் பணி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ROC. No.28819–4/P3/2019 நாள்**.02.12.2019** வரப்பெற்றது. வரப்பெற்ற செயல்முறை உத்திரவு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கவும், இப்பணியினை நகராட்சியின் குப்பை கிடஙகு பகுதியான பா.ஊ.சா நகரில் அமைத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Construction of Resource Recovery Centre (RRC) -1 No | 18.00 |

| GOI SHARE | STATE SHARE | ULB SHARE | TOTAL ESTIMATE |
|---|---|---|---|
| 35% | 55% | 10% | 100% |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இப்பணியினை நகராட்சியின் குப்பை கிடஙகு பகுதியான பா.ஊ.சா நகரில் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் இப்பணிக்கு மதிப்பீடு தொகையினை விட கூடுதல் செலவினம் ஏற்பட்டால் நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2273/2019/இ1)

133) திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண். 1 முதல் 36 முடிய நிறுவப்பட்டுள்ள அனைத்து தெருவிளக்குகளும் கடந்த 01.10.2019 முதல் 31.12.2019 முடிய மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் இயக்கி பராமரிப்பதற்கு அனுமதித்து நகர மன்ற தீர்மானம் எண்.114 நாள்.18.10.2019 படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணியினை செய்வதற்கு மெசர்ஸ் சஞ்சய் டிரேடர்ஸ் 23-எ பை-பாஸ் சாலை,தருமபுரி-636701 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்த காலம் கடந்த 31.12.2019-ம் தேதியுடன் முடிகின்றது.

மேலும் நகராட்சி நிர்வாக காரணங்களை முன்னிட்டும் பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட செந்துரவிலைவிகித அட்டவணை (PWD Schedule Of Rates) 2019-2020-க்குரிய விலை விகிதம் அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் கூடுதல் கால அவகாசம் கருதியும், கூடுதலாக மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.01.2020 முதல் 31.03.2020 முடிய மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை கவனித்து வரும் மெசர்ஸ் சஞ்சய் டிரேடர்ஸ் தருமபுரி நிறுவனத்தின் மூலம் (பழைய மதிப்பீட்டு தொகை விலை விகிதத்திற்கே) மாதம் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் மூன்று மாத காலத்திற்கு மொத்த செலவினம் ரூ.6.00 இலட்சம் செலவின தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(**ந.க.எண்**.1342/2016/**இ**1)

**134)** திருப்பத்தூர் நகராட்சியில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் 2019 நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.8621/2019/பிசி3, நாள்.30.09.2019 உத்திரவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அச்சகம் கே.வி.பி.கம்ப்யூட்டர்ஸ், திருவண்ணாமலை அச்சகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட அச்சுக் கூலியில் 36 வார்டுகளுக்கு 10 வாக்காளர் பட்டியல் ஒரு பக்கத்திலும் (பக்கம் ஒன்றுக்கு ரூ.0.47 பைசா) மற்றும் 90 வாக்காளர்பட்டியல் இருபக்கத்திலும் (பக்கம் ஒன்றுக்கு ரூ.0.44 பைசா) ஆகமொத்தம் 36–வார்டுகளுக்கு 100–நகல்கள் அச்சடிக்க ஆகும் செலவினம் ரூ. 1,21,380/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து ஓராயிரத்து முண்ணூற்று எண்பது மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

36 வார்டுகளுக்கான வாக்களார் பட்டியல் 100 நகல்கள் அச்சடிப்பு கூலி ரூ.1,21,380/– செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.592/2019/எப்1)